**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு), திருவில்லிபுத்தூர்.**
**முன்னிலை :- திரு. T.V.மணி, B.A., LL.B.,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**2025** ம் ஆண்டு **ஆகஸ்ட்** திங்கள் **14** ஆம் நாள் **வியாழ**கிழமை

IA.No.11/2025 in OS.No.134/2010

1) கிருஷ்ணவேணி
2) சஞ்சீவிக்குமார்
3) முத்துலட்சமி ... மனுதாரர்கள்/வாதிகள்

-எதிர்-

1) ஸ்ரீராமு (இறந்துவிட்டார்)
2) சரஸ்வதி என்ற பாப்பா
3) சஞ்சீவிராஜ்
4) வெங்கடேசன் என்ற கண்ணன் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
5) ஜானகிராமன்
6) கிருஷ்ணசாமி
7) ராமர் ... 5, 6, 7 உத்தேச எதிர்மனுதாரர்கள்/5, 6, 7 உத்தேச பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பாக 31.07.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ராஜகுரு, M.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.போஜராஜன், B.Sc., LLM., அவர்கள் முன்னிலையாகியும், உத்தேச எதிர்மனுதாரர்கள்/உத்தேச எதிர்வாதிகள் 5, 6, 7 ஆகியோர்களை அழைத்தும் ஆஜரின்மையால் இருதரப்பாக்கப்பட்டும், மனுஉரை, எதிர்உரை, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்கப்பட்டும், இன்று இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

அசல் வழக்குரையில் திருத்தம் செய்து கொள்ள அனுமதி கோரி கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151 உரிமையியல் விசாரணை சட்டப்பிரிவின் கீழ் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**

மனுவில், தபசில் கண்ட சொத்தில் 1ம் மனுதாரருக்கு உரிய பாகங்களை கேட்டு வழக்கு தாக்கல் செய்யும் பொழுது, 1ம் மனுதாரருக்கு எழுதப்படிக்க தெரியாத காரணத்தினாலும், வயதாகிவிட்டபடியாலும் சில முக்கிய ஆவணங்கள் கிடைக்காததால் வழக்கு தாக்கல் செய்து இருந்த சமயத்தில் 15.02.2010 ஆம் தேதி 1, 5, 6 எதிர்மனுதாரர்கள், 3ம் எதிர்மனுதாரருக்கு ஆவண எண்.1029/2010 கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார்கள். அதே தேதியில் 1, 5, 6 எதிர்மனுதாரர்கள் சேர்ந்து 7ம் எதிர்மனுதாரருக்கு ஆவண எண்.1031/2010 விற்பனையை பதிவு செய்துள்ளார்கள். ஷை விற்பனை செய்துள்ள சொத்துக்களில் மனுதாரர்களுக்கு பாகம் உள்ளது. ஆகையால் இவ்வழக்கில் உத்தேச தரப்பினர்களை தரப்பினர்களாக சேர்க்க வேண்டி தாக்கல் செய்த இ.ம.எண்.9/2025 ல் கடந்த 03.07.2025 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பிராதை சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே இம்மனு தாக்கலாயிற்று.

**3) 3ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2, 4 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்உரையின் சுருக்கம்**

தாவா சீர்திருத்த மனுவில் 5 முதல் 7 உத்தேச எதிர்மனுதாரர்களை சேர்த்து அசல் வழக்கினை சீர்திருத்தம் செய்ய வேண்டுமே தவிர இ.ம.எண்.9/2025 மனுவிற்கு விரோதமாக சர்வே எண்.61/1 ல் 49.50 ஏர்ஸ் நிலத்தையும், சர்வே எண்.66/3 ஏல் 1.50 ஏர்ஸ், சர்வே எண்.67/1 ஏல் 32.50 ஏர்ஸ், சர்வே எண்.67/4 ல் 1.83.50 ஏர்ஸ், சர்வே எண்.69/5 ல் 3 ஏர்ஸ் நிலங்களை நீக்க வேண்டுமென்றும் 2ம் எதிர்மனுதாரர் 15.12.2010 ல் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் உத்தேச 5, 6 எதிர்மனுதாரர்கள் எழுதிக்கொடுத்த ஆவண எண்.1029/2010 செல்லத்தக்கதல்ல என்றும் 1, 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்து 2ம் எதிர்மனுதாரருக்கு ஆவண எண்.1031/2010 ன் படி எழுதிக் கொடுத்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றும் கோரியுள்ள பரிகாரங்கள் குறித்து தாவா பிராதை சீர்திருத்தம் செய்ய இயலாது. இ.ம.எண்.9/2025 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் விளைவாக ஏற்படுத்தப்பட்ட தொடர் சீர்திருத்தம் மட்டும்

தாக்கல் செய்ய இயலுமே தவிர, 15 வருடங்களுக்கு முன்பாக நடைபெற்ற சொத்து பரிமாற்றம் குறித்து ஏற்பட்ட பதிவு ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்பது போன்று இ.ம.எண்.9/2025 க்கு தொடர்பற்ற பரிகாரங்களை கோர இயலாது. மேலும் மேற்சொன்ன சர்வே எண்களின் விபரத்தை நீக்க வேண்டும் என்பது குறித்து எவ்வித விளக்கமும் கூறவில்லை. சீர்திருத்த விபரத்தில் 9 வது தபசில் சொத்தின் விபரத்தில் 8 முதல் 22 அயிட்டங்களை சேர்த்துக் கொள்ள வேண்டுமென மட்டும் கூறப்பட்டுள்ளது. ஷை சொத்துக்களுக்கும் இந்த வழக்கிற்கும் என்ன சம்பந்தம் அது யாருடைய சொத்து அவைகளை எதற்காக சேர்க்க வேண்டும் என்பது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. எந்த அடிப்படையில் சொத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பது குறித்தும் குறிப்பிடப்படவில்லை. 8 முதல் 22 அயிட்ட சொத்துக்களில் 13 வது அயிட்ட சொத்து 2 ம் எதிர்மனுதாரரின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டுள்ளது. அதனை நான்கு வழி சாலைக்காக தற்போது ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. மீதம் 11 செண்ட் மட்டுமே 2 ம் எதிர்மனுதாரரின் தகப்பனார் பெயரில் பட்டா எண்.502 ல் இருந்து வருகிறது. 14, 18, 22 அயிட்ட சொத்துக்கள் தவிர மற்றவைகள் அனைத்தும் 2 ம் எதிர்மனுதாரருக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். 18 முதல் 22 அயிட்ட சொத்துக்கள் 2 ம் எதிர்மனுதாரருக்கு அவரது தகப்பனாரின் உடன்பிறந்த சகோதரியான சரஸ்வதியின் வாரிசுகளால் தனித்து பாத்தியப்படுத்தி கொடுக்கப்பட்ட சொத்துக்களாகும். அதனையும் பாகப்பிரிவினைக்கு உட்படுத்தியிருப்பது தவறாகும். எனவே எதிர்மனுதாரர்கள் பக்க செலவுத் தொகையுடன் மனுதாரர்களது மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிர்உரை தாக்கலாயிற்று.

**4)** இந்த மனுவில் தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர்கள் கோரிய பரிகாரத்தை பொறுத்து மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்.

**5)** இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டன.

6) தீர்வு

மனு உரையும், எதிர்உரையும் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையும் பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களும் பரிசீலிக்கப்பட்டது. இ.ம.எண்.9/2025 மனுவில் சொல்லிய சங்கதிகளையும், அந்த மனுவிற்கு இந்த எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்உரையும் பரிசீலிக்கப்பட்டது. தற்பொழுது மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுமூலமாக பிராது சீர்திருத்தம் செய்ய வேண்டிய விபரம் என்று சொல்லப்பட்ட சங்கதிகளை முற்றிலுமாக எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்உரை மூலமாக ஆட்சேபிக்கப்பட்டது. இந்நீதிமன்றத்தால் இ.ம.எண்.9/2025 ல் பிறப்பித்த உத்தரவுரையும் பரிசீலிக்கப்பட்டது. இ.ம.எண்.9/2025 ல் என்ன பரிகாரம் கோரப்பட்டதோ அதை பொறுத்து தான் பிராதை சீர்திருத்தம் செய்து கொள்ள முடியும், எதிர்மனுதாரர்கள் கூறுவது போல் இ.ம.எண்.9/2025 ல் சொல்லப்பட்ட சங்கதிகளுக்கு விரோதமாக, எதிர்மனுதாரர்கள் ஆச்சரியப்படும் வகையில் காலம் கடந்து சொல்லப்பட்ட ஒன்றாக உள்ளது என்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட ஆட்சேபணையும் ஏற்புடையதாக உள்ளது என்றும் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. எனவே இம்மனுவை அனுமதிக்கக் கூடியதாக இல்லை என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

முடிவில், இம்மனுவை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவுத் தொகைக்கு உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2025 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14 ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T V MANI    Digitally signed by T V MANI
Date: 2025.08.14 14:29:17 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை

T V MANI

Digitally signed by T V MANI
Date: 2025.08.14 14:29:22 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.
IA.No.11/2025 in OS.No.134/2010
உத்தரவு நாள் – 14.082025